# தமிழகத்தில் 5 பல்கலை.களின் தொலைநிலைப் படிப்புகளுக்கு யுஜிசி அங்கீகாரம்

## இணையதளத்தில் விவரங்கள் வெளியீடு

**சென்னை, அக். 3:** சென்னை பல்கலைக்கழகத்தின் 32 தொலைநிலைப் படிப்புகள் உள்பட தமிழகத்திலுள்ள 4 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகம் சார்பில் வழங்கப்படும் தொலைநிலைப் படிப்புகளுக்கு பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) அங்கீகாரம் அளித்துள்ளது. இதுகுறித்த விவரங்களை www.ugc.ac.in என்ற இணையதளத்தில் மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

நாடு முழுவதும் உள்ள தொலைநிலைக் கல்வி நிறுவனங்களைக் கண்காணித்து கட்டுப்படுத்தும் அதிகாரம் யுஜிசி வசம் வந்ததைத் தொடர்ந்து, திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்விக்கான புதிய வழிகாட்டுதலை (தொலைநிலைக் கல்வி வழிகாட்டி-2017) 2017 ஜூன் மாதம் யுஜிசி வெளியிட்டது.

அதன் பிறகு, நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களிடமிருந்து தொலைநிலைக் கல்வியை நடத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை யுஜிசி வரவேற்றது.

அந்த அறிவிப்பின்போது, தொலைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், குறைந்தபட்சம் 3.26 நாக் புள்ளிகள் பெற்றிருக்கும் கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே, தொலைநிலைக் கல்வியை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்படும் என்ற புதிய நிபந்தனையையும் யுஜிசி விதித்திருந்தது.

இதன் காரணமாக சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகிய 3 பல்கலைக்கழகங்கள் மட்டுமே தொலைநிலைப் படிப்புகளை வழங்கும் தகுதியைப் பெற்றன.

அதனைத் தொடர்ந்து, தொலைநிலைப் படிப்புகளில் குறிப்பிட்ட அளவில் பேராசிரியர் நியமனம் இருந்தால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்ற நிபந்தனையையும் யுஜிசி விதித்தது.

இந்த நிபந்தனை காரணமாக சென்னைப் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி நிறுவனம் சார்பில் வழங்கப்பட்டு வந்த 51 படிப்புகளில் 3 படிப்புகளுக்கு மட்டுமே யுஜிசி அனுமதி கிடைத்தது. மீதமுள்ள 48 படிப்புகளுக்கு அங்கீகாரத்தை ரத்து செய்தது. மேலும் பல பல்கலைக்கழகங்கள் இதேபோன்று பாதிக்கப்பட்டன.

**யுஜிசி புதிய அங்கீகாரம்:** இந்த நிலையில், செப்டம்பர் 27 -ஆம் தேதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில், தமிழகத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் உள்பட 5 பல்கலைக்கழகங்களில் கூடுதல் படிப்புகளுக்கு யுஜிசி அங்கீகாரம் அளித்துள்ளது.

அதன்படி, சென்னை பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் எம்.பி.ஏ., எம்சிஏ மற்றும் இளநிலை, முதுநிலை படிப்புகள் என மொத்தம் 32 படிப்புகளுக்கு யுஜிசி அங்கீகாரம் அளித்துள்ளது. இதேபோன்றுஅண்ணா பல்கலைக்கழகம் சார்பில் வழங்கப்பட்ட படிப்புகளில் ஒன்றுக்கு மட்டுமே யுஜிசி அங்கீகாரம் அளித்திருந்த நிலையில், இப்போது எம்.பி.ஏ. மற்றும் எம்சிஏ ஆகிய இரண்டு படிப்புகளுக்கும் யுஜிசி அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சார்பில் வழங்கப்பட்ட படிப்புகளில் முன்னர் 38 படிப்புகளுக்கு மட்டுமே யுஜிசி அனுமதி அளித்திருந்த நிலையில், தற்போது 44 படிப்புகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் புதிதாக தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் 15 தொலைநிலை படிப்புகளுக்கும் யுஜிசி அனுமதி அளித்துள்ளது. மேலும், எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும் 5 தொலைநிலைப் படிப்புகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**30 நாள் அவகாசம்:** கல்வி நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட தொலைநிலைப் படிப்புகளில் மாணவர் சேர்க்கையை அக்டோபர் 20 -ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும். அதன் பிறகு சேர்க்கை நடத்தப்படக் கூடாது என யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.

மேலும், அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட படிப்புகளுக்கு அங்கீகாரம் பெற, உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து 30 நாள்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.